வரையறுக்கப்பட்ட கன்வில் ஹோல்டிங்ஸ் (''தனியார்'') கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் கம்பனியினதும் அதன் துணைக் கம்பனியினதும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள பிரிவுகளின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. கம்பனியினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் கம்பனியினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான குழுவின் நிதி நிலைமையினையும் அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்
- கம்பனியின் நிதிக்கூற்றுக்களானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதனது நிதி நிலைமையினையும் அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் குழுவினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 இருப்புக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியில் வழமையாக இருப்பை சரி பார்க்கும் முறைமை இருக்கவில்லை.

(ஆ) கையிலுள்ள இருப்புக்கள் பற்றிய ஏதாவது முரண்பாடுகள் இருந்து அது வருட இறுதி வரையிலும் தெரியாதது தொடர்பான உடனடித் தகவல்களை முகாமைத்துவம் கொண்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் மெதுவாக நகருகின்ற நிர்மாண மூலப்பொருள் இருப்புக்கான விரிவான காலக்கழிவு பரீட்சிப்பை கம்பனி நடாத்தியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் குழுவின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் முறையே ரூபா 766,910 மற்றும் ரூபா 173,803,716 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் முறையே ரூபா 85,879,218 மறறும் ரூபா 214,113,763 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான கம்பனி மற்றும் குழுவினது நிதிசார் விளைவுகளில் ரூபா 85,112,308 மற்றும் ரூபா 40,310,047 முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 நிதிசார் விளைவுகளின் பொழிப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | |
|---|---|---|---|---|
| | குழு | | கம்பனி | |
| | 2016 | 2015 | 2016 | 2015 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய வருமானம் | 150,837,363 | 1,755,453 | 80,000,000 | - |
| நிர்வாகச் செலவினங்கள் | (141,351,666) | (97,339,174) | (8,242,318) | (9,494,182) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் காலக்கழிவு | - | (111,373,340) | - | - |
| நிதிசார் வருமானம் | 204,628,067 | 299,152,468 | 14,121,535 | 10,261,092 |
| எவ்விரீபீஎல் ஆக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியை மாற்றல் | - | 81,608,309 | - | - |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **214,113,764** | **173,803,716** | **85,879,217** | **766,910** |
| வருமான வரிச் செலவினம் | (53,877,612) | (50,393,907) | (22,481,218) | (1,847,562) |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | **160,236,152** | **123,409,809** | **63,397,999** | **(1,080,652)** |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

**4.1.1** டபிள்யூபி பிவீ 2565 ஆம் பதிவு இலக்கத்தைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம், வரையறுக்கப்பட்ட சினோ லங்கா ஹோட்டல்கள் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனியால் உடமையாக்கப்பட்ட டபிள்யூபி கேவை 5208 லாண்ட் றோவர் டிப்பென்டர் ஜீப்பொன்று, ஹெலன்கோ ஹொட்டல் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனியினால் உடமையாக்கப்பட்ட வாண்ட் றோலர் டிப்பென்டர் ஜீப்பொன்றும் நிதி அமைச்சின் பொறுப்பிலிருந்தது. கம்பனியானது இந்த வாகனங்கள் தொடர்பில் குத்தகை உடன்படிக்கையை தொடங்கியிருந்தது. எனினும், நிதி அமைச்சானது இந்த உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. உடன்படிக்கையில் இனங்காணப்பட்ட தொடக்க காலப்பகுதியும் காலங்கடந்திருந்தது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**4.1.2** கன்வில் குழு வரையறுக்கப்பட்ட (கன்வில் ஹோல்டிங் தனியார்) மற்றும் சினோ வரையறுக்கப்பட்ட லங்கா ஹோட்டல்கள் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனியானது வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதே கட்டிடத்தில் அமைந்துள்ளது. எனினும், 2016 ஆம் ஆண்டிற்காக வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியிலுள்ள முறையான வாடகை உடன்படிக்கையில்லாமல் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியானது கன்வில் ஹோல்டிங்ஸ் இடமிருந்து பின்வரும் செலவினங்களை பதிவழித்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **செலவீன வகைகள்** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| வாடகை | 2,960,302 |
| மின்சாரம் | 1,533,064 |
| பாதுகாப்பு | 592,034 |
| வீத வரிகள் | 249,462 |
| நீர் | 44,461 |
| **மொத்தம்** | **5,379,323** |

### 4.2 அங்கீகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

இயக்குனர் சபையின் அங்கீகாரமில்லாமல், 2016 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட சினோ லங்கா ஹோட்டல்ஸ் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனியானது ரூபா 11,240,711 பெறுமதியான மேலதிக வேலைகளினை மேற்கொண்டிருந்ததுடன், இது ஒப்பந்தகாரர்களுடனான தொடக்க உடன்படிக்கைகளிலிருந்த நிபந்தனைகளிலிருந்து வேறுபடுத்துகிறது.